**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**எம்.சி.ஓ.பி.எண் 478/2016**
**நாள் 07/11/2025 வெள்ளிக்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர் தரப்பின் 1–வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10–வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – ஆனந்த் பாபு (PW1) | த/பெயர் – வேலு |
| வயது – 39 | தொழில் – |
| விலாசம் – | |

**முதல் விசாரணை–**

நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். இவ்வழக்கு குறித்த விவரங்கள் அனைத்தும் பிரமான வாக்குமூலத்தின் வாயிலாக கூறியுள்ளேன். மனுதாரர்தரப்பு சான்றாவணங்கள் கீழ்க்கண்டவாறு குறியீடு செய்யப்படுகிறது.

1. (1). முதல் தகவல் அறிக்கை நகல் **ம.சா ஆ 1** ஆகவும்,

(2). விபத்து பதிவேட்டு நகல் **ம.சா ஆ 2** ஆகவும்,

(3). எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவு சான்று நகல் **ம.சா ஆ 3** ஆகவும்,

(4). எதிர்மனுதாரர் பேருந்தின் ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் நகல் **ம.சா ஆ 4** ஆகவும்,

(5). மருத்துவ விடுவிப்பு அறிக்கை அசலுடன் சரிபார்க்கப்பட்ட நகல் **ம.சா ஆ 5** ஆகவும்,

(6). கதிரியக்கப்படம் ம.சா ஆ 6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை–**

1. விபத்து சமயத்தில் நான் என்ன செய்துக்கொண்டிருந்தேன் என்றால் ஸ்ரீதேவி கல்லூரியில் B.Com இறுதி ஆண்டு படித்துக்கொண்டிருந்தேன்.

தற்போது என்ன வேலை பார்த்து வருகிறேன் என்றால் எந்த வேலையும் பார்க்கவில்லை, வேலை தேடிவருகிறேன். என்னுடைய வயது, மற்றும் படிப்பை நிரூபிக்கும் வகையில் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து எப்போது எங்கு நடந்தது என்றால் 31.03.2013 ம் தேதியன்று காலை சுமார் 07.00 மணியளவில் மாதாவரம் ரவுன்டானா அருகே என்னுடைய இருசக்கர வாகனத்தில் சென்றுக்கொண்டிருந்த போது MTC பேருந்து ஓட்டுநர் திடீர் என பேருந்தை வலது பக்கமாக திருப்பியதால் என் வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டுவிட்டது.

2. எனக்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கான உரிமம் உள்ளதா என்றால் உள்ளது. நான் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் விபத்து சமயத்தில் தலைகவசம் அணியவில்லை என்றால் சரியல்ல, அணிந்திருந்தேன். விபத்து நடந்த இடம் பேருந்து நிறுத்தம் என்றால் சரியல்ல, பிரதான சாலையாகும். விபத்து ஏற்பட்டவுடன் எந்த மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டேன் என்றால் குமரன் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டேன். நான் தாக்கல் செய்துள்ள கதிரியக்கபடம் 2013 ம் ஆண்டு எடுக்கப்பட்டது என்றால் சரிதான். சமீபத்தில் எந்த கதிரியக்கபடமும் எடுத்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்தில் ஏற்ப்பட்ட காயங்கள் அனைத்தும் எனக்கு சரியாகிவிட்டதால் தான் சமீபத்திய கதிரியக்கபடத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

3. நடந்த விபத்திற்கு நான் தான் காரணம் என்றும் விபத்து நடந்த இடத்தில் பேருந்து நிறுத்தம் உள்ளது என்றும் அதனால் ஓட்டுநர் பேருந்தை நிறுத்துவதற்காக மெதுவாக தான் சென்றார் என்றும் நான் தான் குறுகலான இடத்தில் இருசக்கர வாகனத்தை ஓட்டிச்சென்று பேருந்து

படிகட்டில் மோதி விபத்தை ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல. அதனால் தான் யாருடைய தவறு என காண்பிக்க என் தரப்பில் இறுதி அறிக்கையோ அல்லது மோட்டார் வாகன ஆய்வறிக்கையோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**